(8) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) தனியார் அலுவல் நாளில் வேறு அரசு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற விதிகளின்படி ஒவ்வொரு வியாழக்கிழமையையும் தனியார் அலுவல்களுக்காக ஒதுக்க வேண்டுமென்று இருக்கிறது. இந்த வாரம் அந்த வியாழக் கிழமையை மாற்றி வெள்ளிக்கிழமை என்று வைத்திருக்கிறோம். இன்றையதினம் தனியார் அலுவல்கள் இருந்தும் 11-40 வரை அரசாங்க அலுவல்களையும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் உரிமைப் பிரச்சினைகளை எல்லாம் எடுத்துக்கொண்டுவிட்டு—இப்போது தனியார் அலுவலை எடுத்துக்கொள்கிறபோது இதற்கு நேரம் மிகவும் குறைந்து விடுகிறது. இப்படித் தனியார் அலுவல் தினத்தில் மற்ற அலுவல்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, இதற்கான நேரத்தை குறைப்பதில் பயனில்லை. இனிமேலாவது ஒவ்வொரு வியாழக்கிழமையும் கட்டாயம் தனியார் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும், தனியார் அலுவல் தினத்தில் வேறு அரசாங்க அலுவல்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தாங்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேசி, ஏகமனதாக எடுத்த முடிவு. அந்த ரூலிலேயே

"Provided however, that where a Thursday has been so taken over for the transaction of Government business under the above proviso, the Speaker may allot in lieu thereof any other day for the Private Members' Business."

என்று இருக்கிறது. அதனால் இன்றைக்கு தனியார் அலுவல்களை எடுத்துக்கொள்வதில் தவறு இல்லை.

"All Thursdays should be set apart for Private Members' Business".

என்று நமது கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து முடிவு எடுத்தால் அப்படிச் செய்யலாம்.